## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN APRIL – 2009

### SOH 1.11 – SOCIAL HARMONY - I

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "நவீன உலகில் சமூக நல்லிணக்கம் என்பது இன்றியமையாத ஒரு எண்ணக்கருவாகும்." இக்கூற்றினை கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் அடையாளம் காண்க.

    (அ) பல்லின சமூக நல்லிணக்கத்திற்கு

    (ஆ) தேசிய ஒருமைப்பாட்டிற்கு (02 X 10 = 20 புள்ளிகள்)

02. கீழ்வரும் தலைப்புக்கள் தொடர்பாக உதாரணம் தந்து கருத்துரைக்குக.

    (அ) துன்பம்

    (ஆ) விரக்தி

    (இ) முரண்பாடு

    (ஈ) வன்முறை (04 X 05 = 20 புள்ளிகள்)

03. ரொபர்ட் ரெட் கர் (Robert Red Gurr) முன்வைத்த சார்பு இழிவுக் கோட்பாடு (Theory of Relative Deprivation) தொடர்பாக கீழ்வரும் எண்ணக்கருக்களை வரைபடத்துடன் விளக்குக.

    (அ) எதிர்பார்க்கை சமாந்தரமாக இருக்க நிறைவேற்றுகை வீழ்ச்சியடைதல் (Detrimental Deprivation) (08 புள்ளிகள்)

    (ஆ) எதிர்பார்க்கை சமாந்திர நிலையில் இருந்து அதிகரிக்க நிறைவேற்றுகை சமாந்திர நிலையில் இருத்தல் (Aspirational Deprivation) (07 புள்ளிகள்)

    (இ) எதிர்பார்க்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்ல நிறைவேற்றுகை சிறிது அதிகரித்து வீழ்ச்சியடைதல் (Progressive Deprivation) (05 புள்ளிகள்)

04. (அ) கீழ்வரும் நிலைகளில் ஏற்படும் முரண்பாடு தொடர்பில் வரைபடம் வரைந்து அதன் உறவு நிலை பற்றி குறிப்பிடுக.

    (i) குடும்பம் (05 புள்ளிகள்)

    (ii) நாட்டில் (05 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் முரண்பாடு தொடர்பில் முரண்பாட்டு மரம் (Conflict Tree) ஒன்றினை வரைந்து அம்முரண்பாட்டின் தன்மைகள் பற்றி அடையாளப்படுத்துக.

(10 புள்ளிகள்)

05. இலங்கையில் காணப்படும் கீழ்வரும் சமூகங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டு அம்சங்களை அடையாளப்படுத்துக.

(அ) சிங்கள – தமிழ் (07 புள்ளிகள்)

(ஆ) தமிழ் - முஸ்லிம் (07 புள்ளிகள்)

(இ) சிங்கள – முஸ்லிம் (06 புள்ளிகள்)

06. (அ) சமாதானம் என்றால் என்ன? சமாதானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு காணப்படுகின்றது. ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) நாடுகளிடையே சமாதானத்தினை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் (UNO) பங்கினை மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

07. கீழ்வரும் எண்ணக்கருக்களுக்கு உதாரணம் தந்து விளக்குக.

(அ) மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் (Third Party Mediation) (08 புள்ளிகள்)

(ஆ) திணிக்கப்பட்ட மத்தியஸ்தம் (Arbitrary Mediation) (07 புள்ளிகள்)

(இ) முரண்பாட்டுத் தீர்வு (Conflict Resolution) (05 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** மாத்திரம் சிறுகுறிப்பு எழுதுக.

(i) அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் உலக சமாதான எதிர்பார்ப்பும்

(ii) சமூக நல்லிணக்கப் பாடப்பரப்பு

(iii) அகதிகளும் மனிதாபிமான உதவிகளும்

(iv) பெண்களும் சமாதானமும்

(02 X 10 = 20 புள்ளிகள்)

***